**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை:திரு. எஸ். சந்திரசேகர், பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, சங்கரன்கோவில்**

**2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ஆம் நாள் வியாழக்கிழமை**

**இடைநிலை மனு எண்.2/2021**
**இன்**
**இயக்க ஊர்தி விபத்து கோரிக்கை அசல் மனு எண்.86/2019**

1. பழனி
2. மகாலெட்சுமி . . . மனுதாரர்கள்/கோரிக்கையாளர்கள்

/எதிர்/

1. மா. மணிகண்டன்
2. வீ. கணேசன் (இறப்பு) . . . எதிர்மனுதார்கள்/எதிர்மனுதார்கள்
3. க. விஜயலெட்சுமி
4. க. தங்கமலை
5. க. அஜித் அகர்கர்
6. வீ. வீரலட்சுமி . . . எதிர்மனுதாரர்கள்/ உத்தேச 3,4,5,6 எதிர்மனுதார்கள்

*(4,5,6 மனுதார்களின் தாயாரும், அடுத்த சிநேகிதியுமான 3ம் மனுதார் மூலம்)*

7. கிளை மேலாளர்,
இப்கோ டோக்யோ ஜெனரல் இன்சூரன்ஸ்
கம்பெனி லிமிடெட், பாளையம்கோட்டை
. . . எதிர்மனுதாரர்/உத்தேச 7ஆம் எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 12.12.2022ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதார்கள் தரப்பில் வழக்கறிஞர்

திரு. V. கிளாஸ்டின் அவர்களும், 1ஆம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. காந்திகுமார் அவர்களும், 4 முதல் 6 எதிர்மனுதார்கள் தரப்பில் நீதிமன்ற பாதுகாலராக வழக்கறிஞர் திரு. C. சங்கரநாராயணன் அவர்களும், 7ஆம் எதிர்மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. நாகராஜன் அவர்களும் முன்னிலையாகியும், 3ஆம் எதிர்மனுதார் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக தீர்மானிக்கப்பட்டும், 2ஆம் எதிர்மனுதார் இறந்துவிட்ட நிலையிலும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், வழக்குக் கோப்புக்களை பரிசீலனை செய்தும், இன்றுவரை இந்நீதிமன்றப் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உ த் த ர வு

3 முதல் 7 எதிர்மனுதார்களை பிரதான அசல் மனுவில் கட்சி சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதார்களால் இம்மனு உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுவின் சுருக்கம்

அசல் மனுவில் அழைப்பாணை சென்றபின்புதான் 2ஆம் எதிர்மனுதார் இறந்துபோன விபரம் தெரியவந்தது என்றும், அந்த காலகட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பொது ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தினால் மனுதார்களால் ஷை 2ஆம் எதிர்மனுதாரின் இறப்பு குறித்தும், அவரது வாரிசுகள் குறித்தும் விசாரிக்க இயலாமல் போய்விட்டது என்றும், அதன்பின்புதான் மனுதார்களால் எதிர்மனுதாரின் இறப்பு குறித்தும், அவரது வாரிசுகள் இந்நிர் 3 முதல் 6 எதிர்மனுதார்கள் என்பது குறித்தும் முறையான தகவல் கிடைக்கப்பெற்றது என்றும், அதுபோல், வழக்கு விபத்தில் ஈடுபட்ட வாகனமானது இந்நிர் 7ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததும்

தற்போதுதான் தெரியவந்தது என்றும், அதனால் இந்நிர் 3 முதல் 7 எதிர்மனுதார்கள் பிரதான அசல் மனுவிற்கு அவசிய கட்சிகள் என்றும், எனவே, இந்நிர் 3 முதல் 7 எதிர்மனுதார்களை பிரதான அசல் மனுவில் கட்சி சேர்த்து, மனுவை மேல் நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டியது அவசியம் என்றும், இல்லையெனில் மனுதார்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. <u>**7ஆம் எதிர்மனுதாரின் எதிருரையின் சுருக்கம்**</u>

மனுதார்களின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதில்லை என்றும், பிரதான அசல் மனுவின் குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும் மனுதார் தரப்பில் காப்பீடு எடுக்கப்பட்ட பாலிசி எண் மற்றும் பாலிசி விபரங்கள், பாலிசி எடுக்கப்பட்ட விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ், அனுமதிச் சான்றிதழ், எந்த வகையான வாகனம் என்பது சம்பந்தமான ஆவணங்கள் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் மனுதாரர் தரப்பில் தந்தால்தான் விபத்தில் ஷை வாகனம் சம்பந்தப்பட்டுள்ளதா? என்பதன் உண்மை தன்மை தெரியவரும் என்றும், இந்நிர் எதிர்மனுதார் ஒரு அவசியமற்ற தரப்பினர் என்றும், மற்றபடி மனுதார்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இம்மனுவின்பேரில், 1 மற்றும் 4 முதல் 6 எதிர்மனுதார்கள் தரப்பில் எதிருரை இல்லை என்றும், செலவுத்தொகையின்பேரில் மனுவை அனுமதிக்கலாம் என்றும் எடுத்துரைக்கப்பட்டு, அதுசம்பந்தமாக மனுவிலும் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்வு காணவேண்டிய விஷயம் யாதெனில்,

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா?

என்பதேயாகும்.

6. இரு தரப்பிலும் யாதொரு சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிறுத்தவில்லை. இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7. <u>தீர்வு</u>:

அசல் மனுவில் அழைப்பாணை சென்றபின்புதான் 2ஆம் எதிர்மனுதார் இறந்துபோன விபரம் தெரியவந்தது என்றும், அந்த காலகட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பொது ஊரடங்கு அமலில் இருந்த காரணத்தினால் மனுதார்களால் ஷை 2ஆம் எதிர்மனுதாரின் இறப்பு குறித்தும், அவரது வாரிசுகள் குறித்தும் விசாரிக்க இயலாமல் போய்விட்டது என்றும், அதன்பின்புதான் மனுதார்களால் எதிர்மனுதாரின் இறப்பு குறித்தும், அவரது வாரிசுகள் இந்நிர் 3 முதல் 6 எதிர்மனுதார்கள் என்பது குறித்தும் முறையான தகவல் கிடைக்கப்பெற்றது என்றும், அதுபோல், வழக்கு விபத்தில் ஈடுபட்ட வாகனமானது இந்நிர் 7ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்ததும் தற்போதுதான் தெரியவந்தது என்றும், அதனால் இந்நிர் 3 முதல் 7 எதிர்மனுதார்கள் பிரதான அசல் மனுவிற்கு அவசிய கட்சிகள் என்றும், எனவே, இந்நிர் 3 முதல் 7 எதிர்மனுதார்களை பிரதான அசல் மனுவில் கட்சி சேர்த்து, மனுவை மேல் நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடவேண்டியது அவசியம் என்றும், இல்லையெனில் மனுதார்களுக்கு

பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுதார்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

*8.* பிரதான அசல் மனுவின் குறுந்தலைப்பிலும், நெடுந்தலைப்பிலும் மனுதார் தரப்பில் காப்பீடு எடுக்கப்பட்ட பாலிசி எண் மற்றும் பாலிசி விபரங்கள், பாலிசி எடுக்கப்பட்ட விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் பெயர் மற்றும் வாகனத்தின் பதிவுச் சான்றிதழ், அனுமதிச் சான்றிதழ், எந்த வகையான வாகனம் என்பது சம்பந்தமான ஆவணங்கள் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் மனுதாரர் தரப்பில் தந்தால்தான் விபத்தில் ஷை வாகனம் சம்பந்தப்பட்டுள்ளதா? என்பதன் உண்மை தன்மை தெரியவரும் என்றும், இந்நிர் எதிர்மனுதார் ஒரு அவசியமற்ற தரப்பினர் என்றும், எனவே, மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் 7ஆம் எதிர்மனுதார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

9. வழக்குக் கோப்பினை ஆராய்கையில், பிரதான அசல் மனுவில் எதிர்மனுதார்களுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்ட நிலையில், 2ஆம் எதிர்மனுதார் இறந்துபோனதாக அவருக்கான அழைப்பாணை திருப்பப்பட்டு, அவருக்கான மேல்நடவடிக்கை எடுப்பதற்காக அசல் மனு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், மனுதார்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

*10.* பிரதான அசல் மனு நிலுவையிலிருக்கும்போது, 2ஆம் எதிர்மனுதார் இறந்துபோய்விட்டதால் ஷையாரின் வாரிசுகளான *3* முதல் 6 எதிர்மனுதார்களையும், விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திற்குரிய காப்பீட்டு சான்றிதழ் தற்போதுதான் கிடைக்கப்பெற்றதால், ஷை வாகனத்தின் காப்பீட்டாளரான 7ஆம் எதிர்மனுதாரும் அசல் மனுவில் கட்சி சேர்க்கப்படவேண்டுமென்று மனுதார்கள் தங்களது மனுவில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், 7ஆம் எதிர்மனுதார் தரப்பில், விபத்திற்குள்ளான

ஷை வாகனம் தங்களது காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றும், அதனால் மனுவுக்கு 7ஆம் எதிர்மனுதார் அநாவசிய கட்சி என்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

*11.* பிரதான அசல் மனுவானது *13.02.2018* தேதிய விபத்தில் இறந்துபோன கார்த்திக்குமார் என்பவரின் இறப்புக்காக மனுதார்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஷை விபத்தில் TN79 B 2742 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனம் சம்பந்தப்பட்டுள்ளதாக மனுதார்கள் தங்களது பிரதான அசல் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். மேலும், பிரதான அசல் மனு நிலுவையிலிருக்கும்போது, 2ஆம் எதிர்மனுதார் இறந்துபோய்விட்டதால், ஷையாரின் வாரிசுகளான 3 முதல் 6 எதிர்மனுதார்களை கட்சி சேர்க்கவேண்டுமென்று மனுதார்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. மேலும், 2ஆம் எதிர்மனுதார் இறக்கவில்லை என்றோ அல்லது இறந்துபோன 2ஆம் எதிர்மனுதாருக்கு இந்நிர் 3 முதல் 6 எதிர்மனுதார்கள் சட்டமுறையான வாரிசுகள் இல்லை என்றோ அல்லது இந்நிர் 3 முதல் 6 எதிர்மனுதார்களை தவிர 2ஆம் எதிர்மனுதாருக்கு வேறு வாரிசுகள் உள்ளனர் என்றோ எதிர்மனுதார்கள் தரப்பில் கட்சி செய்யப்படவில்லை. மேலும், 2ஆம் எதிர்மனுதார் கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் இறந்துபோனதால் உடனடியாக இந்நிர் 3 முதல் 6 எதிர்மனுதார்களை கட்சி சேர்க்க இயலவில்லை என மனுதார்கள் தரப்பில் கூறப்படும் கூற்று ஏற்கத்தக்க வகையிலேயே உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இறந்துபோன 2ஆம் எதிர்மனுதாரின் சட்டமுறையான வாரிசுகளான இந்நிர் 3 முதல் 6 எதிர்மனுதார்கள் பிரதான அசல் மனுவின் தீர்வுக்கு அவசிய தரப்பினர் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

*12*. மேலும், *13.02.2018* தேதிய விபத்தில் TN79 B 2742 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனம் சம்பந்தப்பட்டுள்ளது என பிரதான அசல் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஷை வாகனத்தின் காப்பீட்டாளரை பிரதான அசல் மனுவில் கட்சி சேர்க்கப்படவில்லை. ஷை

விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனமானது இந்நிர் 7ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதென மனுதார்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டு, அதற்கு ஆதரவாக ஷை வாகனத்தின் காப்பீட்டு சான்றின் நகல் மனுதார்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஷை காப்பீட்டு சான்று நகலை பரிசீலிக்கையில், ஷை விபத்தில் சம்பந்தப்பட்ட TN79 B 2742 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனமானது இந்நிர் 7ஆம் எதிர்மனுதார் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2ஆம் எதிர்மனுதார் கொரோனா ஊரடங்கு காலகட்டத்தில் இறந்துபோனதால் உடனடியாக இந்நிர் 3 முதல் 6 எதிர்மனுதார்களை சந்தித்து, விபத்திற்குள்ளான வாகனமானது எந்த காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்ற விபரத்தை வாங்க இயலவில்லை என மனுதார்கள் தரப்பில் கூறப்படும் கூற்று ஏற்கத்தக்க வகையிலேயே உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், *13.02.2018* தேதியில் மனுதார்கள் குறிப்பிடும் விபத்து நடைபெறவில்லை என்றோ அல்லது ஷை விபத்தில் TN79 B 2742 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனமானது சம்பந்தப்படவில்லை என்றோ அல்லது ஷை இரு சக்கர வாகனமானது தங்களது காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என்றோ 7ஆம் எதிர்மனுதார் தரப்பில் கட்சி செய்யப்படவில்லை. எனவே, விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் காப்பீட்டாளரான இந்நிர் 7ஆம் எதிர்மனுதாரும் பிரதான அசல் மனுவின் தீர்வுக்கு அவசிய தரப்பினர் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இந்நிர் 3 முதல் 7 எதிர்மனுதார்களை பிரதான அசல் மனுவில் கட்சி சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவு பிறப்பிப்பதுதான் நீதியின்பாற் உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

*13.* எனவே, மேற்கண்ட காரணங்களுக்காக, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

*14.* இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று **2022ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ல்** அவையறியப் பகரப்பட்டது.

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.12.22 18:09:19 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

மனுதார்கள் தரப்பு சாட்சிகள்: இல்லை
மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை
எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்: இல்லை
எதிர்மனுதார்கள் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை

S CHANDRA SEKAR
Digitally signed by S CHANDRA SEKAR
Date: 2022.12.22 18:09:25 +0530

சார்பு நீதிபதி,
சங்கரன்கோவில்.

**சார்பு நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**இடைநிலை மனு எண்.2/2021**
**இன்**
**உரிமையியல் மேல்முறையீட்டு**
**வழக்கு எண்.86/2019**

**உத்தரவு (அசல்/வரைவு)**

**நாள்: 22.12.2022**